RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்




OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் நாவல்களின் காலப்பின்னணி

**ச. ரஞ்சனா [அ], கி. புவனேஸ்வரி [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயர்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032. இந்தியா,

# Timeline of Rajam Krishnan's Novels

**C. Ranjana [a, *], K. Bhuvaneswari [a]**

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai-600032, India

*Corresponding Author:
ranjanareshu0810@gmail.com

Received: 27-11-2025
Revised: 27-02-2026
Accepted: 07-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan is an important novelist in Tamil literature, known for her strong social consciousness and progressive approach. Her novels are largely set against the backdrop of social, political, and economic changes.Kurinjithen centers on rural life. In the post-Independence period, land reforms, changes in agriculture, and the impact of the caste system brought significant transformations to village society. The economic struggles of rural people and the domestic and social burdens borne by women are portrayed in close connection with the historical context. The novel reflects the social conditions of the 1950s–1960s.Valai KaramThis novel primarily focuses on women's lives and the social restrictions imposed on them. During the 1960s–1970s, there was growth in women's education, employment opportunities, and social awareness. At the same time, family oppression and economic dependence continued. This contradictory social situation forms the historical backdrop of Valai Karam.AlaivaaykkaraiyilThis novel portrays coastal life. The economic hardships of the fishing community, their nature-dependent livelihood, and social divisions reveal the socio-economic conditions of the 1960s–1980s. Changes in life brought about by industrialization and urban development are also reflected in the novel.

**Keywords:** Kurinjithen-Valai-Karam, Alaivaaykkaraiyil

## முன்னுரை

நாவலில் இன்றியமையாதவை கால பின்னணி ஆகும். இவை கதை நிகழும் இடம், சுற்றுப்புறச் சூழல், காலம் முதலியவற்றை தெளிவுபடுத்துவது ஆகும். அதுமட்டுமின்றி கதை மாந்தர்களின் பண்பை உருவாக்கவும் இது துணை புரிகின்றது. இப்பின்னணி இடம், காலம், சமுதாயம், வரலாறு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பலவற்றை உள்ளடக்கி அமைகிறது, ராஜம் கிருஷ்ணன் நாவல்களில்,

1.குறிஞ்சித்தேன் (1963)

2.வளைக்கரம் (1969)

3.அலைவாய்க்கரையில் (1978)

ஆகிய மூன்று நாவல்களும் வெவ்வேறு வகையான சமுதாயத்தினரின் சிக்கல்களை விளக்கும் விதமாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கியத்தில் சமூக உணர்வு மிக்க நாவலாசிரியராக சிறப்பிடம் பெற்றவர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள். பெண்கள், கிராமப்புற மக்கள், தொழிலாளர் வர்க்கம், தாழ்த்தப்பட்ட சமூகங்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு அவர் எழுதிய நாவல்கள் அந்தந்த காலத்தின் சமூக-அரசியல் சூழலைப் பிரதிபலிக்கின்றன. காலப்பின்னணியைக் கதை நிகழும் காலகட்டத்தின் அளவு, கதையில் அது எவ்வாறு, எத்தகைய சொற்களால் குறிக்கப் படுகின்றது என்ற இருநிலைகளில் காணலாம். குறிஞ்சித் தேன், வளைக்கரம், அலைவாய்க்கரை இம்மூன்று நாவல்களிலும் காலப் பின்னணி அமையுமாற்றை தெளிவுபடுத்துவதன் நோக்கமே இக்கட்டுரையாகும்.

## குறிஞ்சித்தேன்

கதை நிகழும் மொத்த காலகட்டத்தில் மிக நீண்டதொரு காலத்தைப் பின்னணியாகக் கொண்டு ராஜம்கிருஷ்ணன் நாவல் களில் முதலிடம் பெறுவது 'குறிஞ்சித்தேன்' நாவலாகும். இந்நாவலில் ஜோகி என்பவன் ஒன்பது வயது சிறுவனாக அறிமுகமாகி முடிவுரையில் ஐந்து குறிஞ்சிகளைக் கண்ட ஜோகிக் கிழவராகக் காட்டப்படுகின்றான். ஐந்து குறிஞ்சி என்று கூறும் போது அறுபது வருடங்களை அது குறிக்கிறது. முடிவுரையில் மூன்று ஆண்டுகள் கழிந்தன என்றும், கதைத் தொடக்கத்தில் ஜோகியின் வயது ஒன்பது என்றும் கூறுவதைக் கழித்து நோக்கும் போது 'குறிஞ்சித்தேன்' கதை நிகழும் காலகட்டம் நாற்பத்தி யெட்டு ஆண்டுகள் ஆகும். இக்கதை பின்னோக்கு உத்தியின்றித் தொடக்கத்திலிருந்து நாற்பத்தியெட்டு ஆண்டு காலக் கதை சீராகச் சொல்லப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதொரு செய்தி யாகும். 'வளைக்கரம்' நாவல் பதினான்கு ஆண்டுகாலக் கதையை யும், 'அலைவாய்க்கரையில்' நாவல் ஏழெட்டு ஆண்டு காலக் கதையோட்டத்தையும் கூறுகின்றன.

கதை நிகழ்ச்சி நடைபெறும் காலப்பின்னணியை மணி, கிழமை, ஒரு நாளின் உட்பிரிவுகளான காலை, மாலை, உச்சி, அந்திப்பொழுது, பருவங்களின் பெயர், தமிழ் மாதப்பெயர், ஆங்கில மாதப்பெயர் ஆகியவற்றால் குறிப்பிட்டுச் சொல்லுகின்ற அமைப்பு இவரது நாவல்களில் காணப்படுகின்றது. மேலும் ஆண்டுகள் கழிவதை எண்ணால் கூறுகின்ற தன்மையும் காணப் படுகின்றது. ஆனால் 'குறிஞ்சித்தேன்' நாவலில் மட்டும் ஆண்டு கள் கழிவதைப் படகர்களின் வழக்கப்படி 'குறிஞ்சி' என்றே குறிப்பிட்டுச் சொல்லுகின்ற அமைப்பை இந்நாவலில் பல இடங் களில் காணமுடிகின்றது. மேலும் குறிஞ்சி என்ற சொல்லைப் படகர்கள் இடையே பண்பாட்டு மாற்றம் ஏற்படுவதற்கு முன்பு மட்டுமே ஆசிரியர் கையாண்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## வளைக்கரம்

வளைக்கரம்' நாவலில் 'நேற்று துளசி கல்யாணம்' என்றும், 'இன்றுதுளசி கல்யாணம் கழிந்த மறுநாள்' என்றும், 'மகர சங்கராந்தி கழித்து' என்றும், 'பாலகுணமாசத் திருநாளின்போது' என்றும், பிப்ரவரி மாதத்தில், தவசு மாதம் என்றும் விரதநாட்கள் தொடங்குவதற்கு முன் மூன்று நாட்கள் முழுக்க முழுக்க மகிழ்ச்சியை கொண்டாடும் கார்னிவல் நாட்களாயிற்றே' என்றும் காலத்தைக் கோவாவில் நடக்கும் திருவிழா போன்ற நிகழ்ச்சி களின் பெயர்கள் தொடர்பால் குறிப்பிட்டுச் சொல்வதைக் காணமுடிகின்றது. கதை மாந்தரின் கருத்துக்கேற்பக் காலப்பின்னணி அமைவது இவரது நாவல்களில் அருகிக் காணப்படுகின்றது. 'வான மடைத்துக் கொட்டும் சூலை மாதம் ஒவ்வோர் ஆண்டும் வரும் மழைக்காலம் தான். ஆனால் இவ்வாண்டு அது வழக்கமான பருவமழைக் காலமாக ஈசானுக்குத் தோன்றவில்லை. முறுக்கிக் கூட்டிய போய் இழைகளெல்லாம் பிரிந்து விட்டனவே? நின்ற கால் நிலையாமலே உழைத்தால்தான் அரும்பாடுபட்டுத் திரட்டிக் குவித்த மன உறுதிகள் சின்னா பின்னமாய்ப் போய்விட்டனவே' என்று போர்த்துக்கீசிய அரசு கோவானிய விடுதலை இயக்கத்தினரிடம் நடந்து கொண்ட முறையில் சிதறிவிட்ட அவர்கள் நிலையை ஒரு கதைமாந்தர் பின்னணியை ஒட்டி எண்ணிப் பார்ப்பது, அக்காலப் அமைந்துள்ள பாங்கினைப் புலப்படுத்துகின்றது.

## அலைவாய்க்கரையில்

'அலைவாய்க் கரையில்' நாவலில் காலத்தை மீன்பிடிக்கும் பரதவர் வாழ்வில் தொடர்புடைய பருவத்தைக் குறிக்கும் சொல்லாலும், நேரத்தை விண்மீன்களின் தோற்றம், வானில் சூரியனின் இருப்பிடம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களாலும் குறிப்பிட்டுச் சொல்லுகின்ற தன்மையைக் காணமுடிகின்றது. மேல்காற்று அடைமழைக் காலத்தைக் 'கச்சான் அடை' என்றும், சிறுமீன்கள் படாத மாசி, பங்குனி மாதத்தைத் 'தங்காலம்' என்றும் பரதவர்களின் வழக்கத்திலுள்ள சொற்கள் மூலமும் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது. மேலும் 'ஐப்பசி அடை மழை' 'கார்காலம் "சித்திரை பௌர்மணி கோடைக் காற்று துவங்கும் காலம்' கார்த்திகை முடிந்து மார்கழி பிறந்ததுமே வாடைக்காற்று', 'ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி எல்லாம் இறால் காலமாயிற்றே' என்று மாதப் பெயர்களையும், பருவப் பெயர்களையும் சுட்டிக் காலப்பின்னணி அமைவதைக் காணலாம். அத்துடன் அக்கால கட்டத்தில் கிடைக்கும் மீனைச் சேர்த்துக் கூறுகின்ற கால அமைப்பையும் இந்நாவலில் காணமுடிகின்றது.

மேலும், ஒரு நாளின் நேரத்தை மணியில் குறிப்பிடாமல், 'பொழுது உச்சிக்கு வந்து விடுகிறது' என்றும், 'பொழுது சாயும் நேரம்' என்றும், 'பொழுது வெளுப்புக் குடுக்குமுன்ன' என்றும்,' பொழுது வெள்ளாப்புக் குடுக்குமுன்னியே' என்றும் 'பொழுது சாயும் நேரம்' என்றும், 'பனிவெய்யில் மாலைநேரத்தைப் பொன்முலாம் பூசிக் கொண்டிருந்தது' என்றும் பகல் நேரத்தினை குறிப்பிடக் காண்கின்றோம்.மாலை, இரவு, நேரங்களை 'மாலைப் பூசை நேரம்' என்றும், 'வானில் எங்கோ ஒரு ஒற்றைத் தாரகை மினுக் மினுக் கென்று தெரிகிறது' என்றும், 'ஆறாங்கோட்ட வெள்ளியில்லை' என்றும் பரதவர்களின் வழக்கப்படியே ஆசிரியர் இந்நாவலில் குறிப்பிட்டுச் சொல்வதைக் காணலாம்.

## முடிவுரை

ராஜம்கிருஷ்ணன் வேறுபட்ட மூன்று சமுதாயத்தினரைப் பற்றிக் குறிஞ்சித்தேன், வளைக்கரம், அலைவாய்க்கரையில் என்ற மூன்று நாவல்களிலும் அந்தந்தச் சமுதாயச் சூழலுக்கேற்ற சொற்களாலும், அவரவர் பழக்கத்திலுள்ள விழாக்கள் பெயராலும், தொழில் தொடர்பான சொற்களாலும் காலப்பின்னணியை அமைத்துள்ள நுட்பம் பாராட்டுதற்குரியது. இவ்வமைப்புக் குறிப்பிட்ட கதைமாந்தர்களின் கதையைச் சொல்லும்போது அவர்கள் வாழும் அவர்களுக்கேயுரிய பின்னணியில்தான் சொல்ல முடியும். ஏனெனில், மனித வாழ்க்கை அந்த அளவுக்கு அவர்கள் வாழும் மண்ணிலே வேர் கொண்டிருக்கிறது. குறிஞ்சித்தேன், வளைக்கரம், அலைவாய்க்கரையில் ஆகிய மூன்று நாவல்களையும் ஆய்வின் அடிப்படையில், ராஜம் கிருஷ்ணன் சமூக உணர்வுடனும் மனிதநேய பார்வையுடனும் காலகட்ட மாற்றங்களைப் பதிவு செய்த சிறந்த நாவலாசிரியர் என்பது உறுதியாகிறது.

## References


Rajam Krishnan, S. (2019) Kurinjiththen, Sri Senpaga Publishers.

Rajam Krishnan, S. Valaikkaram, Tamil Puththagalayam.

Rajam Krishnan, S, (1978) Alaivaaikkaraiyil, Paari Puththaga Pannai



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License